செ.வெ.எண்: 831/2016 நாள்: 26.11.2016

# பத்திரிகை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மீன்துறையில் காலியாக உள்ள இரண்டு (2) மீன்வள உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட நாகர்கோவில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நடைமுறையிலுள்ள விதிகளின்படி இனசுழற்சி முறையில் பெறப்பட்ட பட்டியலிலிருந்தும், தினசரி நாளிதழின் வாயிலாக விளம்பரம் செய்தும் மேற்படி பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளது. எனவே, தமிழில் எழுத, பேச தெரிந்த, நீச்சல் தெரிந்த, மீன்பிடி வலை பின்னவும், அறுந்த வலைகளை சரிசெய்யவும் தெரிந்தவர்கள் 18 வயதிலிருந்து 30 வயதிற்குள் (01.07.1986 முதல் 01.07.1998) உள்ள நபர்கள் விண்ணப்பிக்கலாம். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு அரசு விதிமுறைகளின்படி முன்னுரிமை வழங்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள தகுதியான நபர்கள் கீழ்கண்ட முகவரியில் விண்ணப்பங்கள் பெற்று பூர்த்தி செய்து 31.12.2016-க்குள் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

மீன்துறை துணை இயக்குநர்,
(மண்டலம்) கன்னியாகுமரி,
(இருப்பு) நாகர்கோவில்,
டிஸ்டில்லரி ரோடு,
வடசேரி.

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**கன்னியாகுமரி (மாவட்டம்),**
**(இ) நாகர்கோவில்.**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.